ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

न मोक्षस्याकांक्षापि च विभववांछापि च न मे
न विज्ञानापेक्षा शशिमुखि सुखेच्छापि न पुनः ।
अतस्त्वां संयाचे जननि जननं यातु मम वै
मृडानी रुद्राणी शिव शिव भवानीति जपतः ॥

देवीस्तोत्रे ॥

மோக்ஷத்தை அடையவேண்டுமென்கிற விருப்பம் எனக்கில்லை. பொருளை அதிகம் பெறவேண்டுமென்கிற இச்சையும் இல்லை. சகல கலைகளிலும் விசேஷமான ஞானத்தை சம்பாதிக்கவேண்டுமென்கிற அவாவும் இல்லை. சந்திரன் போல் பிரகாசிக்கும் முகத்தையுடைய ஹே தேவி! சிறந்த சுகத்தை அடையவேண்டுமென்றும் விருப்பமில்லை. இவ்விதமிருந்தாலும், ஹே ஜநநி! உன்னை மிகவும் யாசிக்கிறேன். எதற்காகவென்றால் மிருடானி, ருத்திராணி, சிவசிவ, பவாநீ, என்பது முதலான உன்னுடைய திருநாமங்களை ஜபிக்கும் எனக்கு, இனி இந்த ஸம்சாரத்தில் ஜந்மா ஏற்படக்கூடாது என்கிற பிரார்த்தனையைப் பூர்த்திசெய்து கொடுக்கும்படி வேண்டுகிறேன்.

இதனால் மனுஷ்யர்கள் கஷ்டப்படாமல் சுகமாயிருக்கவேண்டுமானால், வேறான ஒரு ஸாதனத்தையும் அபேக்ஷிக்கவேண்டாமென்றும், இந்த ஸம்சாரத்தில் ஏற்படும் ஜந்மாவை ஏற்படாமல் விலக்குவதற்கு வேண்டிய ஸாதனத்தையே பெறவேண்டியது முக்கியமென்றும், சகலவிதமான கஷ்டங்களுக்கும் இதுவே முக்கிய காரணமென்றும் அறிவிக்கப்படுகிறது. இக்கருத்தைக் கொண்டுதான் ஒரு பெரியார்,

संसारे रे मनुष्या वदत यदि सुखं स्वल्पमप्यस्ति किंचित् ।

ஹே மானிடர்களே! ஸம்சாரத்தில் அற்பமாகிலும் சுகமிருப்பின் தெரிவியுங்கள். நான் அங்கீகரிக்க ஆக்ஷேபமில்லை. துக்கத்தைத் தவிர வேறு கிடையாதென்று அறிவிக்கிறார். ஆகையால் எவ்வளவு பிரயாசை ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் பவப்பிணியை அகற்றமுயலவேண்டும்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வேதாந்த ஸாரம்.

(௪௯௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுவரை வெளியிட்ட ஸித்தாந்தங்களில் ஒன்றையும் அங்கிகரிக்காத சூன்யவாதிகளான சில பௌத்தர்கள் சூன்யம்தான் ஆத்மாவென்று தீர்மானித்து அதற்கு வேண்டிய பிரமாணங்களை நிரூபிக்கிறார்கள்.

அவையாவன:—

इति निश्चयमेतेषां दूषयत्यपरो जडः ।

இவ்விதம் ஆத்மா சித்ஜட ஸ்வரூபனென்று சிலரால் தீர்மானிக்கப் பட்டதை மற்றொரு ஜடன் தூஷிக்கிறான்.

ज्ञानाज्ञानमयस्त्वात्मा कथं भवितुमर्हति ।
परस्परविरुद्धत्वात् तेजास्तिमिरयोरिव ॥

பிரகாசமும் இருட்டும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருப்பதால் எப்படிச் சேராதோ, அவ்விதம் ஒன்றோடொன்று சேராமலிருக்கும் ஞானமும் அக்ஞானமும் சேர்ந்து எப்படி ஆத்மாவாக முடியும்?

अज्ञानमपि विज्ञानं बुद्धिर्वापि च तद्गुणाः ।
सुषुप्तौ नोपलभ्यन्ते यत्किञ्चिदपि वा परम् ॥

அக்ஞானம், ஞானம், புத்தி இவைகளின் குணங்கள் மற்றுமுள்ள வேறு யாதாகிலும் அற்பமாகிலும் ஸுஷுப்தியில் காணப்படவில்லை.

सुप्तोत्थितजनैस्सर्वैः शून्यमेवानुस्मर्यते ।
यत्ततः शून्यमेवात्मा न ज्ञानाज्ञानलक्षणः ॥

நன்றாய் நித்திரைசெய்து எழுந்த ஜனங்களால் "ஒன்றையு மறியாமல் தூங்கினேன்" என்று சூன்யம்தான் ஸ்மரிக்கப்படுகின்றது. ஆகையால் சூன்யம்தான் ஆத்மாவாகுமேயன்றி ஞானுக் ஞான ரூபமாயிருப்பது ஆத்மாவென்று சொல்வது சரியல்ல. "வேதத்திலும் அஸத்துதான் முந்தியிருந்ததெ"ன்று ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டிருக்கின்றது என்று சூன்யவாதிகள் கருதுகிறார்கள்.

புத்திராத்ம வாதிமுதல் சூன்யாத்ம வாதி வரையிலுள்ள சகல வாதிகளுடைய ஸித்தாந்தங்களும் சரியல்ல. மிகவும் பிராகிருதர்களான வாதிகளால் கூறப்பட்டனவும் விசாரித்தால் நிலை பெருதவைகளுமான ஆபாஸங்களான சுருதி, யுக்தி, அனுபவங்களை முறையே அடுத்தடுத்துவரும் வாதிகள் தங்களுடைய ஆபாஸங்களான சுருதி, யுக்தி, அனுபவங்களால் கண்டித்து அவர்கள் கொண்டிருக்கும் சித்தாந்தம் தவறென்று நன்கு விளக்கிக்காட்டியிருக்கிறார்கள்.

इत्येवं पण्डितंमन्यैः परस्परविरोधिभिः ।
तत्तन्मतानुरूपाल्पश्रुतियुक्त्यनुभूतिभिः ॥
निर्णीतमतजातानि खण्डितान्येव पण्डितैः ।
श्रुतिभिश्चाप्यनुभवैर्बाधकैः प्रतिवादिनाम् ॥
यतस्तस्मात्तु पुत्रादेश्शून्यांतस्य विशेषतः ।
सुसाधितमनात्मत्वं श्रुतियुक्त्यनुभूतिभिः ॥ ३१.

என்கிற இந்த வசனங்களால் ஆசார்யாளும் இந்த மதங்கள் தவறென்று மொழிந்திருக்கிறார்கள். மேலும், பிரத்யக் ஸ்தூலமல்ல; சக்ஷுஸ்ஸல்ல; பிராணனல்ல; மனமல்ல; கர்த்தாவல்ல. சிந்மாத்திரம் ஸத்ஸ்வரூபம் ஆத்மாவென்று கூறும் பல சுருதி வசனங்களுக்கு விரோதமாகின்றது. புத்திரன்முதல் சூன்யம் வரையி

ளுள்ள யாவும் சைதன்ய பாஸ்யங்களாயும், ஜடங்களாயுமிருப்ப தால் கடம் முதலியவைகளைப்போல் அநித்தியங்களாகின்றபடி யாலும் நான் பிர்மம் என்று வித்வான்களுடைய அனுபவ பலத் தாலும், ஆபாஸங்களான சுருதி, யுக்தி, அனுபவங்களால் ஸ்தா பிக்கப்பட்ட புத்திராதி சூன்யபர்யந்தமுள்ள யாவும் அனாத்மாக் களே யாகின்றன. ஆகையால் ஸர்வ வஸ்துக்களையும் பிரகாசிப் பிக்கின்றதும் நித்தியமாயும் சுத்தமாயும் (ஸம்சார தோஷமற்றதா யும்) புத்தமாயும் (ஸ்வப்பிரகாச ரூபமாயும்) முக்தமாயும் (பந்தமில் லாமல் ஸ்வதந்திரமாயும்) இருப்பதும் ஸத்யஸ்வரூபமாயும் பிரத் யக் சைதன்யமாயும் விளங்கும் வஸ்துவே ஆத்மாவென்று வேதா ந்த சாஸ்திரத்தின் உண்மையை அறிந்த வித்வான்களின் அனுப வம். இதுவரையில் பல வாதிகளால் பரமாத்மாவைப் புத்திரன் முதல் சூன்யம் வரையிலுள்ளவைகளாகக் கருதப்படுவதற்கு அத் தியாரோபமென்று பெயர்.

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

॥ धर्मकल्पतरुः ॥

தர்மகல்பதரு.

(நான்காந்துளிர்)

தர்ம மஹிமை.

पूर्वस्मिञ्जनने धर्मानाचरिष्णुजनाः किल ।
दीना भिक्षामटन्तश्च धनिकद्वार आसते ॥१॥

முன் ஜன்மத்தில் தர்மஞ்செய்யும் இயல்பில்லாதோர்—மறு பிறப்பில் வறுமையுற்றவர்களாய், பிக்ஷை எடுப்பதற்காக பணக் காரர் வீட்டுவாயலில் நிற்கின்றனர். (1)

धर्मं विस्मृत्य लोभेन धनायाक्रान्तमानस ।
धनेन सम्पादितेन बहुना किं फलं वद ॥२॥

தர்மத்தை மறந்து பணவாசை மேலிட்ட (மனமுடைய மூானிடனே!) மனமே! அதிகமாக ஸம்பாதித்த பணத்தினுல் யாது பயன், சொல். (2)

दुःख्यन्त्यज्ञाः प्रश्वसन्तः प्रारब्धे दुःखसंतते ।
प्रारब्धं भोगतो नश्येदिति धीरा विविञ्चति ॥३॥

முன் ஜன்மத்திய தீயவினை, துன்பப்பயனை அளிக்கத் துவக்கும்பொழுது, அறிவற்றவர் பெருமூச்செறிந்து துன்புறுகின்றனர். அறிஞரோ, ஜன்மாந்தரீய நற்றீவினையாவும் அநுபவித்தேதொலையும் என்று ஆராய்கின்றனர். (3)

दुर्लभेनाद्य देहेनापितं धर्मं समाचर ।
धर्मोऽमुत्र रसं दद्याद्यन्त्रनिष्पीडितेक्षुवत् ॥४॥

மிகவறிதாகிய காயத்தின் உதவியால் அளவிலாது தர்மஞ்செய். பின்னர், இவ்வறமானது (அந்தரங்க சுத்தியை யளித்து) ஆலையிலிட்ட கரும்புபோல் (रसो वै सः) ரஸம் எனப்படும் ஆத்மாநந்தத்தை உய்விக்கும். (4)

यन्त्रनिःसारितार्द्रेक्षुरसैर्विन्दन्ति ये गुडम् ।
ऋजीषदेहदाहे ते न विषीदन्ति धार्मिकाः ॥५॥

ஆலையிலிட்ட கரும்பினின்றும் பெருகிய இனிய கறுப்பஞ்சாற்றைக் காய்ச்சி சர்க்கரையை யடைவதுபோல கருப்பஞ் சக்கைக்கு ஒப்பாகிய காயத்தை (உடலை) கிலேசப்படுத்தி அறத்தைச் சம்பாதித்த அறிவாளர்கள்—காய்ச்சுவதற்கு கறும்புச் சக்கை எறிக்கப்படுவதுபோல உடல் எறிந்தாலும் வருந்தார். (5)

अद्य श्वो वा परश्वो वा मृत्युरादातुमेष्यति ।
धर्मं चर यथाशक्ति समादिष्टं मुनीश्वरैः ॥६॥

இன்றைக்கோ, நாளைக்கோ, அதற்கடுத்த தினத்தன்றோ, தர்மராஜன் இழுத்துக்கொண்டுபோக வரப்போகிருன்; ஆகலின் மகரிஷிகள் கூறியவண்ணம் இயன்றவரை அறம்புரியக்கடவாய்.

पुरुषार्थेषु बहुषु दृष्टभोगैकलम्पटः ।
अभूत्वा धर्ममेवैकं मुक्तिसाधनमाचर ॥७॥

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குவித புருஷார்த்தங்களுள், சிற்றின்பம் ஒன்றிலேயே மிகப் பற்றுகொண்டு இராமல், பாம்பரையாகப் பேரின்ப ஸாதனமான ஸநாதன தர்மமொன்றையே கடைபிடித்து ஒழுகுவாயாக. (7)

वटबीजं नखग्राह्यं छायां यच्छति वृक्षितम् ।
ईषच्छिष्टकरस्पृष्टो धर्मो भूरि प्रयच्छति ॥८॥

நகத்திற்குள் ளடங்கக்கூடிய ஆலின்விதை மரமாகி நிழலையளிப்பதுபோல, வேதத்திற்கூறிய கடமையைப் பரிவுடன் அநுஷ்டிக்கும் மஹான்களுடைய கைகளால் ஆசரிக்கப்படும் தர்மம், அளவிலாப்பயனை அளிக்குமாம். (8)

आयुःक्षयमजानन्त उदयास्तमयागतम् ।
सुख्यन्ति जन्तवो नित्यं दैनन्दिनसमीक्षया ॥९॥

ஸூர்யனுடைய உதயாஸ்தமனங்களால் ஏற்படும்வாழ்நாளின் முடிவை அறியாது, பிராணிகள் யாவும் வயிற்றுப்பசியை யாற்றுவதற்காக அலைந்து திரிந்து உண்டு களிக்கின்றன. (9)

याच्ञादीनि च कृत्यात्तवित्तजातप्रपोषितः ।
यदि देहश्चिरस्थायी तदा कुर्यां तदप्यहम् ॥१०॥

இரத்தல் முதலாய இழிவான தொழில் புரிந்து கிட்டிய பணக்குவியலால் நன்கு போஷிக்கப்படும் உடல் வெகுகாலமிருக்குமாகில், அப்பொழுது யான் அத்தொழிலையும் செய்வேன். (அதுதான் அரிது) என்றவாறு. (10)

(நான்காந்துளிர் முற்றும்)

(தொடரும்)

கே. ஏ. இராமலிங்கசாஸ்திரி,
'ஸம்ஸ்க்ருத காமதேனு' பத்திராதிபர்.
கல்லிடைக்குறிச்சி.

ஆர்ய மாணவர்களின் மதவித்யாப்யாஸம்.

அதன் முற்கால தற்கால நிலை.

இந்தியதேசிய கலாசாலைகளில் பயிலும் மாணாக்கர்களுக்குத் தெய்வ பக்தியையும் ஆத்ம ஞானத்தையும் முக்கிய உத்தேசமாகக்கொண்டு, மற்றுள்ள தொழில் கலைகள் சாஸ்திரீயமுறையில கற்றுக்கொடுக்கப்படவேண்டுமென்றும், அவ்வாறு செய்யாமையினாலேயே இந்திய மாணாக்கர்களின் உள்ளத்தில் ஆஸ்திகமத உணர்ச்சி மறைந்துபோயிற்றென்றும், புராதன ஆர்யர்களின் வித்யாப்யாஸ முறையே சிறந்ததென்றும் ஒரு கூக்குரல் இப்பொழுது இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பலபாகங்களிலும் முழங்குகின்றது. “தோன்றின மறையும்; மறைவன தோன்றும்” என்ற தத்துவப்படி “மனிதனுக்கு தேவத்துவ ஸித்தி”வரை அளித்துவந்துள்ள ஆர்யவித்யாப்யாஸமுறை, சென்ற ஒரு தலைமுறையாக மறக்கப்பட்டும் மீண்டும் பண்டிதர்களின் மனத்தில் உதிக்க ஆரம்பித்திருக்கின்றது இயற்கையேயாகும்.

“எதையறிந்தால் இங்கு தோன்கின்ற உலகப்பொருள் முழுதும் அறிந்ததாமோ அதனை அந்த மூலாதாரக் கல்வியை—கூறுக” என்று ஆர்யமாணவர்கள் குருநாதனைப் பணிவுடனும் அன்புடனும் வினவுவதும், அவர் ஞானவித்யை, விஜ்ஞானவித்யை இரண்டின் முடிவையும் தெளிவாக உபதேசிப்பதும் இந்த தேசத்தில் வெகுகால வழக்கமாக இருந்துவந்தது.

ராஜகீய மாறுபாடுகளால் இப்புண்ய பூமியின் பழக்கவழக்கங்கள் யாவும் மாறியதுபோல், ஆர்யர்களின் வித்யாப்யாஸ முறையும் மாறிவிட்டது ஸஹஜந்தான். “वर्णानां ब्राह्मणो गुरुः” என்ற நியமப்படி வித்யா பீடங்களில் குருஸ்தானம் அடையும் உரிமை பிராஹ்மணர்களுக்கு இயற்கையாக அமைந்திருந்தும் சென்ற 18-வது நூற்றாண்டுமுதல் வயிற்றுப் பிழைப்புக்கு வகை செய்யவேண்டி ஆங்கிலங் கற்கச்சென்று, நமது கோரிக்கைகளை

யெல்லாம் அளிக்கக்கூடிய ஆர்யவித்யை என்னும் காமதேநுவை நாம் கண்ணெடுத்துப் பார்க்கவும் மறந்தோம்!

"एतद्देशप्रसूतस्य सकाशादग्रजन्मनः ।
स्वं स्वं चरित्रं शिक्षेरन् पृथिव्यां सर्वमानवाः ॥"

என்றபடி இந்தப் பாரததேசத்திற்பிறந்து குருகுல வாசஞ்செய்து 18 வித்தைகளையும் ஸந்தேஹமின்றி உணர்ந்த பிராஹ்மணோத்தமர்களினின்றும் பிறதேசத்தினர் யாவரும் தம்தம் சரித்திரத்தை கற்றுச்சென்ற காலம்போய், இப்பொழுது ஆர்யர்கள் தம்முடைய பூர்விகர்களை அறிவினர் என்று வாய்விட்டுப் பிரஸங்கிக்குமாறு பிறதேசத்தினரால் சரித்திரம் போதிக்கப்படுகின்றன. உபஜீவனத்தை உத்தேசித்து வேறு வகையின்றி வருந்தும் ஆரிய மாணவர்கள் இதரக் கலைகளை எவ்விதம் கற்றுக்கொண்டாலும் குற்றமில்லை. ஆனல், தமது யதார்த்தமான தெய்விக, மதபோதத்தை மாத்திரம் கைவிடக்கூடாதென்று இப்பொழுது ஒருவாறு ஸமாதானம் கூறுகின்றனர். "வயிற்றுப் பிழைப்பிற்கும் வகை செய்து ஆத்மஞானம் வரையுள்ள குருகுல வித்யாப்யாஸ முறையைப்"பற்றி ஒரு ஸரியான திட்டம் பிரஹ்மஸ்ரீ ஸாரம் இரங்காசாரியாரவர்களால இவ்வாரிய தர்மத்தின் அங்கத்திலேயே நன்கு விளக்கப்பட்டுள்ளமையால், அவ்வாறு பற்பல மேதாவிகளால் குருகுலங்கள் நமது புண்யபூமியின் ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் ஏற்படும்வரை, தற்காலமுள்ள ஆங்கில கலாசாலையில் கல்வி கற்கும் மாணாக்கர்களுக்கு மதஸம்பந்தமான வித்யாப்யாஸம் எவவித நிலைமையிலிருக்கின்றது, அதனைத்திருத்தும் முறை யாது என்பதை ஒருவாறு கவனிக்கவேண்டியது அவசியமாகின்றது.

ஆங்கில ஆதிக்யத்தின்கீழ் இந்த தேசம் வந்தவுடன் இங்குள்ள ஜனங்களைத் துணையாகக்கொண்டு ராஜ்ய நிர்வாகஞ்செய்ய வேண்டியவர்களான அந்நிய நாட்டினர் நம்மவர்களுக்குத் தமது ஆங்கில பாஷையைக் கறறுக்கொடுக்கத் தொடங்கியது அவர்களின் ஆட்சிக்குப் பிரத்யக்ஷமாக உதவியாயிருந்ததுடன், அவர்களின் மதத்தைப் பிரசாரஞ்செய்யவும் அது ஒரு உபாயமாக ஸித்தித்தது. ஆங்கில வித்யாப்யாஸம் என்ற ஏற்பாட்டால் ஆஸ்திக

மதம் அப்ரத்யக்ஷமாக விழுங்கப்பட்டுவருவதை உணர்ந்த ஆஸ்திகர்கள் வித்யாலயங்களில் கட்டாயப்பாடமாக பைபிள் போதிக்கப்படுவதுபோல் ஆர்யமதமாகிய ஹிந்து மதமும் போதிக்கப்பட வேண்டும் என்று வாதஞ்செய்கின்றனர்.

ஜனஸமூஹத்திலுண்டாகிற விரோத உணர்ச்சியை உண்மையான மதபோதத்தால் ஒருவாறு நீக்கிவிடவேண்டும் என்பது தான் ஆஸ்திகர்களின் விருப்பத்திற்கு அஸ்திபாரமாயிருக்கிறது. இந்த உத்தேசத்தினுல்தான் "மதாப்யாஸத்திற்கு அவரவர் மத ஏற்பாட்டுப்படி போதுமான முயற்சிகளும் சௌகரியங்களும் செய்யப்படவேண்டும்" என்ற வாக்கை அறிஞர் யாவரும் வற்புறுத்துகின்றனர். "மதசம்பந்தமான பாடத்தை ஆங்கிலக் கல்விச் சாலைகளில் புகவிடுவது அவசியமல்ல: அது அனுவசியமுமாகும்" என்று சிலர் எதிர்க்கின்றனர். "இவ்வளவு காலமாக பைபிள் போதிக்கப்பட்டுவருகின்ற கலாசாலைக்கு இதுகாறும் இந்த விதியை எடுத்துக்கூறுமல் சலுகை காட்டுவதேன்?" என்றல், அதற்கு சமாதானம் ஆலோசனைக்கு விடப்படுகின்றது!

கலாசாலைகளில் மதஸம்பந்தமான பாடம் கற்பிக்கப்பட வேண்டாம் என்பவர்களின்கருத்து "மதஸம்பந்தமான கல்வியை வீட்டில் போதிக்கப்படவேண்டும்" என்ற நல்லெண்ணமாம். எண்ணம் நல்லதுதான் என்றுலும், அது வீட்டில் நிறைவேறுவதல்ல. இரவு பகலாயுழைத்தும் குடும்ப நிர்வாஹமே தத்தளிக்கும்பொழுது பெற்றேர்கள் தமது மக்களுக்கு மதவித்யாப்யாஸம் செய்துகொடுப்பது எங்ஙனம்? மேலும், பெற்றேர்களுக்குக் கூட தம்முடைய மதம் இன்னதன்மையது என்பதே தெரியக் கூடாமலிருக்கின்றது!

स्वयं तरितुमक्षमः परान् तारयितुमिच्छति ।

என்றுற்போல், தங்களுடைய மன அமைதியையே அறியாத நிலையில் உலகவாழ்க்கையை நடத்திவருகின்ற சாதாரண ஹிந்துக் குடும்பங்களில் மாணுக்கர்களுக்கு மதப்படிப்பைக் கற்றுக்கொடுப்பதற்கிடமேது?

மனிதன் (ஆத்மா) சரீரங்களோடுகூடிய ஒரு ஸ்ருஷ்டி என்றும், ஒவ்வொரு சரீரத்திலுமுள்ள ஆத்மா கௌரவமாகக் கருதப்

படவேண்டுமென்றும் எல்லோரும் உணர்தல் எளிதன்றே! அவ்வித அறிவு ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் நிறைந்த காலத்திலன்றோ மதப்படிப்பை வீடுகளில் எல்லோரும் எதிர்பார்க்கலாம்? அவ்வித நிலை உண்டுபண்ணப்படாமலிருக்கின்ற தற்காலப் போக்கில் பள்ளிக்கூடத்தைத் தவிர்த்து வேறு இடங்களில் மதக்கல்வியைப் புகட்டுதல் எளிதன்று. சுமார் 6 மணிநேரம் பள்ளிக்கூடங்களிலும், 2 மணிநேரம் விளையாட்டிலும் பகல் பொழுது விநியோகிக்கப்பட்டு, இரவில் ஒரு மூட்டை புத்தகங்களையும் நெட்டுருத்தள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்காளாகிவிட்ட மாணுக்கர்களின் இளம் மூளைக்கு வீட்டில் சிறிது ஓய்வு கொடுப்போம் என்றுதான் பெற்றோர்களின் அன்பு கருதச்செய்யும்!

எனவே, மதசம்பந்தமான அறிவு மாணுக்கர்களுக்குச் சிறிதேனும் உண்டாகவேண்டுமானல் தற்காலப் பள்ளிக்கூடப் புத்தகச் சுமைகளில் அநாவசியமாக ஏதேனுமிருக்கின்றதா என்பதை நன்கு கவனித்து அந்தப் புத்தகங்களை போதிப்பதற்காக இதுகாறும் செலவிடப்பட்ட சமயத்தை 'அவசியம் கற்கவேண்டிய' மதப்பாடங்களில் செலவிடுமாறு செய்யவேண்டும். வித்யா இலாகாவின் நிர்வாஹம் இப்பொழுது இந்தியர்களின் கையில் விடப்பட்டிருப்பதால் மதசம்பந்தமான பாடங்களை பல வகுப்புக்களுக்கும் உரிய புத்தகங்களாக எழுதச்செய்து கலாசாலைகளில் புகுவித்தல் எளிதாவதோடு நலமுமாகும்.

மதசம்பந்தமான பாடம் போதிக்கப்பட்டாலன்றி மாணுக்கர்களுக்கு நல்லொழுக்கமாவது, குருபக்தி தெய்வபக்தி தேசபக்தி ராஜபக்தி என்பதாவது சிறிதும் உண்டாக இடமில்லை. ஏனெனின் இப்பொழுது நடைபெறுகின்ற வித்யாப்யாஸ ரீதியானது மாணுக்கர்களின் மனத்தை 'செல்வம் வந்த காலத்திலும், வறுமைவந்த காலத்திலும் சமமாக அமைதியோடு நடத்திச் செல்வதாக இல்லை. எந்த நிலையிலும் விவேகம் சிதறுவண்ணம் சுபாவத்தை அடக்கியாளவேண்டிய பாத்யம் கல்வியொன்றினுக்கே உரியதாயிருப்பதை இக்கால கலாசாலை வித்யார்த்திகளில்—வாலிபர்களில்—எவ்வளவுபேர் உணரக்கூடும்?

ஸ்ரீ ஜாநகீஜாநி:.

வேதங்கள் அபௌருஷேயமானவை.

(௯௦-வது பக்கத்தொடர்ச்சி.)

धर्माद्यभावज्ञाने परस्परहिंसादिना अपकारायैव प्राप्तेः ।

நாம் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். தர்மம் உண்டு அதர்மம் உண்டு. தர்மம் செய்தால் ஸ்வர்க்கம், அதர்மம் செய்தால் நரகம் என்று நன்குணர்ந்த ஜனங்களே அடாத காரியங்களைச் செய்கின்றனர் என்பதை நாம் பிரத்யக்ஷமாய்க் காண்கிறோம். காண்போம். இச்சமயத்தில் 'தர்மாதிகளும் ஸ்வர்க்காதிகளும் கிடையா' என்று ஒருவன் பறையறைவித்தால் என்ன நேரிடுமோ தெரியாது. Might is right என்றபடி ஒருவர் சொத்தையும் மனைவி முதலியவைகளையும் மற்றொருவன் அபஹாரம் செய்யத் தலைப்பட்டுப் பரஸ்பரம் ஹிம்ஸையே அடைவார்களேயொழிய சுகத்தைச் சிறிதேனும் கனவிலும் நினையார். என்பதை நாம் விஸ்தரிக்கவேண்டியதில்லை. இப்பேராபத்தை உண்டுபண்ணின சாஸ்திர கர்த்தாவை அனைவரும் தண்டிக்கமுயலுவார்களாகையால் தண்டனையே சிறந்த பிரயோஜனமாகும். அவர்கள் சொல்வது—விவேகமற்ற ஜனங்கள் நம்மைத் துவேஷிப்பார்கள். விவேகிகளோ என்றால் "இவன் நம் சுகத்தின் பொருட்டே சாஸ்திர நிர்மாணம் செய்தான். ஆனால் காசிக்குப்போனாலும் கலிபகவான் விடவில்லை என்று நம் துரதிர்ஷ்டம் குறுக்கே நின்று ஹிம்ஸையைக் கொடுத்தது. மனைவி முதலியவைகளை அயலான் அபஹரித்தது நம் ஸாமர்த்தியக் குறைவாலன்றோ. இவனென்ன செய்வான்" என்று நினைத்து நமக்கு உபகாரமே செய்வார்கள். அவ்வுபகாரமே பிரயோஜனம்.

அப்படியாயின் வரவும் செலவும் சமமாகப்போகும் காரியம் நிஷ்பிரயோஜனம்தான். விவேகிகள் செய்யும் உபகாரம் வரவு. அவிவேகிகள் செய்யும் அபகாரம் செலவு. யாதொரு லாபமில்லாதபடியால், சாஸ்திரம் திரும்பவும் நிஷ்பிரயோஜனம்தான்.

असत्यानि दुरन्तानि समव्ययफलानि च ।
अशक्यानि च वस्तूनि नारभेत विचक्षणः ॥

"ஒரு யுத்திமான், அஸத்யமானதாயும், முடிவே பெறாததாயும் வரவு செலவு ஸமமாகப் போகிறதாயும், தன்னால் செய்யமுடியாத தாயும் உள்ள காரியத்தை ஆரம்பிக்கக் கூடாது."

அவர்கள் கூறுவது:—ஒரு கருணையுள்ள புருஷன், சேற்றில் கிடந்து தவிக்கும் ஒரு பசுவை உயரத்தூக்கிவிடும் சமயத்தில் அது அம்மனிதனைக் கொம்பால் முட்டிற்று. ஆனாலும் அவன் செய்தது உபகாரம்தானே! அவ்விதமாக, அவர்கள் நம்மைத் துவேஷித்தாலும் அவர்களின் க்ஷேமத்திற்காகவே சாஸ்திரம் இயற்றியது உபகாரம்தானே! இவ்வுபகாரமே நமது சாஸ்திரத்தின் பிரயோஜனம்.

அப்படியாயின் அவ்வுபகாரம் ஸ்வயமாகவே பிரயோஜனமாகிறதா? அல்லது அதனால் வேறு பிரயோஜனமுண்டாகிறதா? என்று வினவுவோம். முதலாவதாகச் சாஸ்திரங்களில்

सुखदुःखाभावान्यतरत्वमेव प्रयोजनत्वम् ।

என்றபடி சுகம், துக்கமின்மை இவையிரண்டில் ஏதாவதொன்றே பிரயோஜனம் என்று வியவஹரிக்கப்படுவதால் உபகாரம் ஸ்வயமாகப் பிரயோஜனமாகாது. இரண்டாவதாக, அதனால் உண்டாகும் வேறு பிரயோஜனம் மேற்கூறியபடி இஹத்தில் ஸர்வ ஜனங்களின் துவேஷமே தவிர வேறில்லை. அப்பசு தூக்கினவனை முட்டினாலும் அதைக் காப்பாற்றினதால் பரலோகத்திலுள்ள பிரயோஜனம் உண்டு என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

न च उपकारेण तस्य प्रयोजनं अदृष्टाभावात् ।

அவர்கள் பரலோகம் முதலிய அதீந்திரிய வஸ்துக்களே இல்லை என்றபடியால் பாரத்ரிகப் பிரயோஜனத்தைப்பற்றிப் பேசலாகாது. முடிவாக அவர்களும் தம் சாஸ்திரத்துக்கு தர்மாதிகளே விஷயம், ஸ்வர்க்காதிகளே பிரயோஜனம் என்று தர்மாதிகளைக் கட்டாயம் ஒப்பவேண்டும். அவைகளை ஸாதிக்கும் அபௌருஷேய வேதத்தையும் ஒப்பித்தாகவேண்டும்.

எழுத்துக்களும் வார்த்தைகளும் உச்சரிப்பினால் உண்டாகின்றன. உச்சரிக்காவிடில் வெளிப்படுவன அல்ல. வேதமோ

இவ்வித அநித்யமான வர்ணங்களால் ஆகியதால் அநித்யமாயிருக்கவேண்டும் எனச் சிலர் சந்தேகிக்கலாம். வேதத்தில் உள்ள அ, ஆ முதலிய எழுத்துக்களெல்லாம் நித்யமானவையே உச்சரிப்பு அவைகளை வெளிப்படுத்துகிறதே தவிர உண்டுபண்ணுவது அல்ல. நித்யமான எழுத்துக்களின் ஸமுதாயமான வேதமும் நித்யம்தான். இவ்விஷயத்தில் அநேக சுருதிகளே பிரமாணமாயுள்ளன.

(1) "ஏ விரூபனே! (ரிஷியின் பெயர்) தேஜோமயனும் பக்தர்களுக்கு வேண்டியவற்றை வர்ஷிப்பவனுமுள்ள பரமாத்மாவைக் குறித்து நித்யமான வசனத்தினால் ஸ்தோத்திரம் செய்வாயாக."—நித்யமான வசனம் என்பதால் வேதம் நித்யமானது.

(2) பைங்கி சுருதி— "நித்யமான வாக்கினாலும் அநித்யமான வாக்கினாலும் ஸர்வோத்தமனும் ப்ராப்யனும் உள்ள பகவானைத் துதி செய்கிறேன். சுருதி நித்யமானது ஸ்மிருதிகளும் இதர வாக்குகளும் அநித்யமானவை."

(3) காத்யாயன சுருதி:— "உத்தமமான பகவானின் ஸ்வரூபத்தை அவசியம் அறியவேண்டும். உத்தமமான சுருதிதான் அவரைத் தெரிவிக்கிறது. சுருதி அநாதிநித்யமானது. அது இல்லாமற்போனால் அவனை அறியமுடியாது."

(4) சுருதி:—"ஆயிரக்கணக்கான (அனந்தமான) மகிமைகளையுடைய ஈசுவரன் எத்தேசகாலத்தில் வியாபித்து இருக்கிறானோ அத்தேசகாலத்தில் வேதவாக்கும் வியாபித்திருக்கிறது. இவ்வேதங்களின் அர்த்தத்தை எந்தப் புத்திமான் நன்குணர்ந்தவன்? (ஒருவரும் உணரவில்லை) எவன்தான் பிறர்களுக்காவது போதித்தவன்?"

இங்கு வேதார்த்தத்தை ஸம்பூர்ணமாயறிந்தவனே இல்லையென்று கூறும்போது, வேதத்தின் கர்த்தா கிடையவேகிடையாது என்று சொல்லவேண்டியதில்லை.

(5) பிரஹ்மாண்டபுராணம்:—

नित्या वेदाः समस्ताश्च शाश्वता विष्णुबुद्धिगाः ।
सर्गे सर्गेऽमुनैव ते उद्गीर्यन्ते तथैव च ॥

எல்லா வேதங்களும் நித்யமானவை. வேதத்தில் 'நான்' முதலிய பதங்கள் (லக்ஷ்மீஸூக்தம் பார்க்க) காணப்படுகின்றன. புருஷன் ஒருவன் இயற்றியதால் 'நான்' என்று சொல்லப்படுகிறது. ஆகையால் பௌருஷேயம் என்றால் शाश्वताः ஒரே பிரகாரமாயுள்ளவை. அதாவது ஏற்கனவே இருந்துவரும் வேதவாக்யங்கள், ஸங்கல்பப் பிரார்த்தனுதி வாக்யங்கள்போல், சிலரால் தம் அபிப்பிராயத்தையும் உட்கருத்தாகச்சேர்த்து சொல்லப்படுகின்றன. ஆகையால் அபௌருஷேயமானவை. பிரளயகாலத்தில் வேதம் நசித்துப் போவதால் எப்படிச் சாசுவதமாகும்? என்றால் विष्णुबुद्धिगाः பிரளயகாலத்தில் வேதம் நாசமடைவதில்லை. மகாவிஷ்ணுவின் புத்தியில் இருக்கும். அப்படியாகில் உலகத்தில் எப்படி வேதத்திற்குப் பிரவிருத்தி? என்றால் सर्गे सर्गे अमुनैव उद्गीर्यन्ते ஒவ்வோர் சிருஷ்டிகாலத்திலும் இவரால் பிரஹ்மாதிகளுக்கு உபதேசிக்கப்படுகின்றன. ஆகையால் மறுபடியும் உலகத்தில் பிரவர்த்தியுண்டு. விஷ்ணுவுக்கு யஜமானன் ஒருவரும் இல்லாததால் வேறு வேதமே உபதேசிப்பாரோவெனின் एते एव பூர்வகல்பத்தில் பிரவிருத்தமானவைகளே இப்பவும் உபதேசிக்கப்படுகின்றன. அதேவேதங்கள் என்றால் சப்தஸாம்யத்தினாலா அர்த்தஸாம்யத்தினாலாவென்றால் तथैव च இரண்டின் ஸாம்யத்தினாலும். இந்தவிஷயம் அடுத்த சுலோகத்தில் விஸ்தரிக்கப்படுகிறது.

तत्क्रमेणैव तैर्वर्णैः तैः स्वरैरेव नान्यथा ॥

பூர்வகல்பத்தில் எந்தக் கிரமத்தோடும், எழுத்துக்களோடும் ஸ்வரங்களோடும் உபதேசிக்கப்பட்டனவோ அதே கிரமம், வர்ணம், ஸ்வரம் முதலியவைகளோடே உபதேசிக்கப்படுகின்றன.

வேதம் அபௌருஷேயமென்பதற்கு இன்னொரு யுக்தி

अतः श्रुतित्वमेतासां श्रुता एव यतोऽखिलैः ॥

இவைகள் அபௌருஷேயமாயிருப்பதால்தான் சுருதி யென்று பெயர் பெற்றன. எப்படியெனின், எல்லாராலும் அவைகள்

கேட்கப்படுகின்றனவே யொழிய ஒருவராலும் செய்யப்படுகிற தில்லை. வஸிஷ்டாதிரிஷிகள் அத்யயனம் செய்யாவிடினும் பாடம் செய்திருக்கிறார்கள். எல்லாராலும் கேட்கப்படுவன என்பது எப்படி என்றால்

जन्मान्तरे श्रुतास्तास्तु वासुदेवप्रसादतः ।
मुनीनां प्रतिभास्यन्ति भागेनैव न सर्वशः ॥

அவர்கள் இஜ்ஜன்மத்தில் சுருதியைக் கேட்டிராமல் இருந்தாலும் ஜன்மாந்தரத்தில் கேட்டிருக்கிறார்கள், நமக்கு நேற்றைய தினம் நடந்த விஷயமே ஞாபகமிருப்பதில்லை. ஜன்மாந்தரத்தில் அனுபவிக்கப்பட்டது தற்காலம் எப்படிப்பிரதிபலிக்கும் என்றால் **वासुदेव प्रसादतः** பகவானுடைய அனுக்ரஹ விசேஷத்தால் பிரதி பலிக்கின்றன. சிருஷ்டிகாலத்தில் ஈசுவரனால் போதிக்கப்படுகிற தென முன் சொல்லப்பட்டது. வியர்த்தமாயிற்றே என்றால் **भागेनैव न सर्वशः** அம்முனிகளுக்கு வேதத்தின் சில பாகம்தான் தோன்றும் மற்றப் பாகங்களை பகவான் உபதேசித்துத் தீர வேண்டும்.

(தொடரும்)

M. ராமராவ்,
ஸ்ரீ மாத்வஸபையின் காரியதரிசி,
கும்பகோணம்.

மதிப்புரை.

படிக்கும் ஸ்திரீகளின் இல்லற நிலைமை:— என்று பெயர் வாய்ந்த ஒரு புஸ்தகம் ராவ்ஸாஹேப் பிரம்மஸ்ரீ எல். ஏ. ரெங்கஸாமி அய்யரவர்களால் இயற்றப்பட்டு அனுப்பப்பட்டதை வரப் பெற்றோம். இதில் ஸ்திரீகள் இருக்கவேண்டிய முறையைவிட்டுத் தங்களுக்குத் தோன்றியவாறு பல அதர்மங்களைச் செய்ய முன்வந்து விட்டதையும், அவர்களுக்கு அவசியமில்லாத படிப்பு விஷயங்களில் புருஷர்களைப்போல் இவர்கள் பிரவேசிப்பதால் நேரும் பலவித கஷ்டங்களையும் நன்கு நிரூபித்து அவர்கள் படித்து முன்னுக்குவந்தால் அதனால் அவர்களுக்கு ஏற்படும் அகங்காரமும், கணவனிடத்தில் செய்யப்படும் அவமரியாதையையும்

தங்களுக்குத்தகாத காரியங்களில் படிப்பின் கர்வத்தால் தலையிட்டுக்கொண்டு அடையப்படும் கஷ்டங்களையும் ஸ்பஷ்டமாய் எழுதி கதாரூபமாக யுக்தி வாதங்களுடன் விளக்கிக்காட்டியிருக்கிறார்கள். பின்னும் ஸ்திரீ, புருஷர் இவ்விருவரும் அவரவர்களுக்கு சாஸ்திரீயமாய் ஏற்பட்ட கர்மாவைவிட்டு மாறுதலாய் அனுஷ்டிக்க ஆரம்பித்தால் நேரும் அநர்த்தத்தையும் நன்றாய் அறிவித்திருக்கிறார்கள். இது ஸ்திரீகளால் அவசியம் பார்க்கப்படவேண்டிய புஸ்தகம். எல்லாரும் வாங்கிப் படித்துச் சுலபமாய் தர்ம தத்வங்களை யறியவேண்டி எளிய தமிழ்நடையில் பிரமாண வசனங்களுடன் அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன் விலை அணா. 4. தபால்ஜார்ஜ் வேறு.

ஹரிஹர ஸமரஸ தத்வ போதினி:—என்கிற நாடகம் இப் புத்தகமும் ஷை பிர்மஸ்ரீ எல். ஏ. ரெங்கஸாமி அய்யரவர்களால் எழுதப்பட்டதே இதில் காவேரியையும் கங்கையையும் பாத்திரப் பிரவேசமாகக் கொண்டுவந்து அவர்களுக்குள் யார் சிறந்தவள் என்கிற விவாதம் ஏற்பட அது ஒரு மாதிரி முடிவையடைய வேண்டி அசரீரிவாக்கால் ஸ்ரீ ஜம்புநாதர் ஸன்னிதிக்குக் காவேரி அனுப்பப்பட்டாள் அங்கு பகவான் செய்த ஆக்ஞையை முன்னிட்டு பல க்ஷேத்திரங்கள் வழியாய் காவேரி சிதம்பரத்திற்கு வந்து சேர்ந்தாள் அவ்விடம் வந்தவுடன் அர்ச்சகர் செய்யும்வினவிற்கு விடைகூறுவதாகக் கற்பித்து "பிர்மா, விஷ்ணு, பரமசிவன எனப் பெயர்வாய்ந்த இந்த மும்மூர்த்திகளும் ஒன்றுதான்; பேதமில்லை" என்று வடமொழிநூல்களிலிருந்தும் பலபிரமாண வசனங்களும் தென்மொழி நூல்களிலுள்ள சிறந்த பல வசனங்களும் விஸ்தாரமாய் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. தற்காலம் பேதபுத்தியைக்கொண்டு ஈசுவரநிந்தை செய்யும் சில அக்ஞர்களுக்கு இப்புத்தகம் நற்புத்தியைப்புகட்டி திரிமூர்த்திகளிடமும் அபேத புத்தியையுண்டாக்கி சிரேயஸ்ஸைக் கொடுக்குமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். இதன் விலை அணா. 6. தபால்சார்ஜ் வேறு.

இந்தப் புஸ்தகங்கள் வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ராவ்ஸாஹேப் எல். ஏ. ரெங்கஸாமி அய்யர்.
16, சின்னக்கடைத்தெரு,
தெப்பக்குளம், திருச்சினுப்பள்ளி.